# பாஸ்கா 3ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

உயிர்த்த இயேசுவின் உடனிருப்பை நம்மோடு நிலைநிறுத்த பாஸ்கா காலம் 03ஆம் ஞாயிறு நம்மை அழைக்கின்றது.

மனுமகனாகிய இறைவன் மரணத்தை வென்று உயிர் பெற்று விட்டார்.

உயிர்த்த இயேசுவை விண்ணில் தேடாமல் நம் உள்ளத்தில் தேடுவோம்.

உயிர்த்த இயேசுவை 'எங்களோடு தங்கும்' என்று மன்றாடவே இன்று அழைக்கப்பட்டு இருக்கின்றோம்.

இன்றைய முதல் வாசகத்தில் பேதுரு, கடவுள் இயேசுவை மக்களுக்காக அர்ப்பணித்ததையும், அவரது அருஞ்செயல்களையும், சாவினை வென்றதையும், தூய ஆவியால் உணர்த்தப்பட்டு, யூத மக்களுக்கு அறிக்கையிட்டு சான்று பகர்வதைக் காண்கின்றோம்.

இறைவனை வலப்பக்கத்தில் கொண்ட தாவீதின் இதயம் பேருவகை கொள்கின்றது.

இறைவன் அருகில் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

இறைவன் உள்ளத்தில் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நாம் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள இறைவனுக்கும் நமக்கும் இணைப்பை ஏற்படுத்தி தரும் பாலமாக இயேசு அமைகின்றார். இயேசுவில் இணைந்திருப்போம். தூய ஆவியைப் பெற்று மகிழ்வோம்.

இன்றைய நற்செய்தியில், இயேசு என்பதை அறியாத இரு சீடர்கள் 'எங்களோடு தங்கும்' என்று இயேசுவை வேண்டுகிறார்கள். இயேசு இறந்தார்; உயிர்த்து விட்டார் என்பதை செவிகளால் மட்டுமே கேட்டிருந்தார்கள். உயிர்ப்பின் அனுபவத்தை பெற்றிருக்கவில்லை. எனவே தான் இயேசுவோடு பயணித்த போது அவரை உணர முடியாதவாறு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. உயிர்ப்பின் அனுபவத்தை பெற்றதால்தான் பேதுரு எருசலேம் மக்களுக்கு துணிவுடன் இயேசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றுகின்றார். நாமும் உயிர்ப்பின் அனுபவத்தை பெற்றால் தான் இயேசுவின் உடனிருப்பை உணர முடியும். அத்தகைய இன்பமான நிகழ்வை உணர வரம் வேண்டி இத்திருப்பலியில் வேண்டுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. தூய ஆவியான துணையாளரை அனுப்பியவரே எம் இறைவா!

திருமுழுக்கின் வாக்குறுதிகளைப் புதுப்பித்த நாங்கள், தூய ஆவியைப் பெற்றுக் கொண்டு அவரின் துணையால் வழிநடத்தப்பட, எம் திரு அவைத் தலைவர்கள், பணியாளர்கள் இறைவனுக்கும் எங்களுக்கும் நல்லுறவுப் பாலமாய் செயல்பட்டு, நற்செய்தியை தங்கள் தாழ்ச்சியான எளிமையான வாழ்வால் வெளிப்படுத்த வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களைப் பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டீர் என்று உறுதி அளித்தவரே எம் இறைவா!

கொள்ளை நோயால் கொத்து கொத்தாக மடிந்துக் கொண்டும், மரணத்தோடு போராடிக் கொண்டும், இப்பூமியைப் பாதாளத்திடம் ஒப்புவிக்காமல், உமது இரத்தத்தால் மீட்டெடுத்து, புதியதொரு வாழ்வை உற்சாகத்தோடு மேற்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய ஆவியைப் பொழிபவரே எம் இறைவா!

திருமுழுக்கினால் புதுப்பிறப்பு அடைந்த நாங்கள், உமது அருள் கொடைகளை பெற்றுக் கொண்டு, தூய ஆவியின் ஆற்றலால் எங்கள் உள்ளங்களில் அமைதியையும் வாழ்வில் நம்பிக்கையையும் பெற்று கொள்ள வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் வழியை அறியச் செய்பவரே எம் இறைவா!

எம் பகுதியில் வேளாண்மைக்கேற்ற கால சூழல் நிலவி விவசாயம் மேம்படவும், நோய்த் தொற்று குறைந்து, கட்டுப்பட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி நிறையவும், இதயத்தின் வேண்டுதல்கள் உமதருளால் நிறைவேறவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com